# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C)
IN THE COURT OF ADDITIONAL SESSIONS JUDGE,
TENKASI.

Calendar
Miscellaneous
Preliminary Register
Sessions **S.C.No.745/2017**

| | | | |
|---|---|---|---|
| Depositions of Witness for | Prosecution | Pw | 12 |
| | Defence | | |
| | Court | | |

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.வெள்ளைதுரைச்சி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th day of July 2024.

(A1 to A5 present.)

**<u>முதல் விசாரணை</u>**

நான் தலைவன் கோட்டையில் வசித்துவருகிறேன். வீட்டுகுடித்தனம். ஆஜர் 1ம் எதிரி எனது கணவர். 4ம் எதிரி முத்துராஜை தெரியும், மற்ற எதிரிகளை எனக்கு தெரியாது. எனக்கும் எனது கணவருக்கும் 1998ஆம் வருடம் திருமணம் நடந்தது. எங்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். 1 பெண், 1 பையன். TN-76-S-0105 பதிவெண் கொண்ட காரை நான் 2018ம் வருடம் விலைக்கு வாங்கினேன். அந்த காலக்கட்டத்தில் நான் ஏலச்சீட்டு நடத்தி வந்தேன். அப்போது எனக்கும் எனது கணவருக்கும் அடிக்கடி

தகராறு ஏற்படும். 2012ம் வருடமே எனது கணவர் என்னை விட்டுபிரிந்து சென்றுவிட்டார். அவர் எந்த ஊருக்கு சென்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. காசிமேஜர்புரத்தை சேர்ந்த சங்கர் என்பவரிடம் எனது காரை வைத்து ரூபாய் 1,10,000/- கடன் வாங்கியிருந்தேன். எனது கணவர் அந்த சமயம் எனது காரை எடுத்து சென்றுவிட்டார். அதன்பிறகு அந்த காரை நான் சங்கர் என்ற நபருக்கு விற்பனை செய்துவிட்டேன். இதைத்தவிர இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**(அரசு தரப்பில் இந்த சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது)**

<u>அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது, எனது கணவர் 1ம் எதிரி சாமித்துரை மற்றும் எதிரிகள் சேர்ந்து காசிமேஜர்புரம் சேர்ந்த சங்கர் என்ற நபரை எனது கார் பைனான்ஸ் விவகாரம் தொடர்பாக சங்கர் என்னிடம் கடன் தொகையை செலுத்தக்கூறி அடிக்கடி தொந்தரவு செய்துவந்ததால் நான் சங்கரிடம் கார் என்னிடம் கிடையாது என்றும் எனது கணவர் சாமித்துரை அச்சன்புதூரில் அவரது 2வது மனைவியுடன் குடியிருக்கும் வீட்டின் பக்கத்தில் மறைத்து வைத்திருப்பதாகவும் அந்த காரை எடுத்து வந்தால் அதை உனக்கே கிரையம் செய்து கொடுக்கிறேன் என்று சொன்னதன் அடிப்படையில் சங்கர் அச்சன்புதூரை சேர்ந்த ராஜகோபால் (எ) சண்டியரை உதவி செய்ய கோரிய போது மேற்படி ராஜகோபால் (எ) சண்டியர் எனது கார் இருக்கும் இடத்தை சங்கருக்கு காட்டிக்கொடுத்தார் என்றும் அந்த காரை சங்கர் கைப்பற்றி எடுத்து சென்றுவிட்டார் என்றும் அதன் பிறகு ஏற்கெனவே பேசிய படி எனது காரை சங்கரிடம் ரூபாய் 1,20,000/-க்கு கிரையம் பேசி கடன் தொகை போக மீதியை பெற்றுக்கொண்டேன் என்றும் சொல்லிவிட்டு, தற்போது 1ம் எதிரி எனது கணவர் என்பதால் அவரை காப்பற்றவேண்டும் என்பதற்காக இந்த முன்விரோதத்தை மறைத்து எதிரிகளுக்கு ஆதரவாக இவ்வாறு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

**ஒம்/-S.மனோஜ்குமார்**
**கூடுதல் மாவட்ட நீதிபதி**
**தென்காசி**